அன்பின் வாசக நெஞ்சங்களே!

“கடவுள் தாம் விடுத்த அழைப்பையும், கொடுத்த அருட் கொடைகளையும் திரும்பப் பெற்றுக்கொள்ளவில்லை.” (உரோ.11:29)

இறைவன் ஒவ்வொரு கணப்பொழுதிலும் தன்னுடைய அழைப்பை விடுத்து கொண்டிருக்கின்றார். ஒவ்வொரு அழைப்பும் வித்தியாசமானது, தனித்துவமானது. இந்த உலகத்தில் வாழும் ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு கணப்பொழுதிலும் எப்படி இருக்க வேண்டும், என்ன செய்ய வேண்டும் என்ற சிந்தனை ஓட்டத்தில் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றான். அழைப்பு என்று கூறும் பொழுது அடுத்த கணம் என்ன செய்வது, அடுத்தது என்ன செய்வது? என்னுடைய இலக்கு, நோக்கம் என்ன? என்பதில் தான் அழைப்பின் தன்மை தங்கியுள்ளது. இறைவனின் திட்டத்தை, வெளிப்பாட்டை அறிந்து செயற்படுவது எமது அழைப்பு விடுக்கும் பணியாக இருக்கின்றது. உதாரணமாக ஒரு மாணவன் படிக்கின்றான் என்றால் அதுவும் இறைவனின் அழைப்பாகவே இருக்கின்றது.

ஒரு தாயானவள் வீட்டு வேலையை செய்யும் பொழுது, அதேவிதமாக தந்தையானவர் தனது குடும்பப் பொறுப்பை மிகவும் கவனமாக செய்யும் பொழுது அது இறைவனின் புனிதமான அழைப்பாகவே இருக்கின்றது. பணியாட்கள் தங்களுடைய நிறைவான பணியை செய்யும் பொழுது, நற்செய்தி அறிவிக்கும் பணி மேன்மைப்படுத்தப்படுகின்றது. ஏழைகள் மட்டில் இரக்கம், அன்பு, பணிகள் செய்யும் பொழுது இறைவனின் உன்னதமான அழைப்பு இங்கே மேன்மைப் படுத்தப்படுகின்றது. ஆகவேதான் புனித பவுல் அடிகளார் கடவுள் தாம் விரும்பிய அழைப்பை விடுக்கின்றார் என்று சொல்லுகின்றார். போதிப்பது மாத்திரமல்ல ஒவ்வொரு கணப்பொழுதும் இறைவனின் திட்டத்தை நிறைவேற்றுகின்ற மனபோக்கைத்தான் இதில் குறிப்பிடுகின்றார்.

அடுத்தது இந்த இறைத்திட்டத்தை செயல்படுத்த இறைவன் பல்வேறு மனிதர்களுக்கு பல்வேறு வித்தியாசமான ஆற்றல்கள், அருட்கொடைகள் பலவற்றை கொடுத்திருக்கின்றார். இது இறைவனால் கொடுக்கப்பட்டவை. ஆனால் அதை சரியான முறையில் பயன்படுத்த வேண்டிய பொறுப்பு எங்கள் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. வித்தியாசமான ஆற்றல்கள், அருட்கொடைகள் ஒவ்வொன்றும் இறைவனின் திட்டமாக இருக்கின்றது. இறைவனின் கட்டமைப்பு ஒவ்வொன்றும், வித்தியாசமான பணி செய்ய வேண்டு மென்றால் அந்த இறைவன் கொடுத்த உண்மையான அருட்கொடையை பயன்படுத்த வேண்டும். அவற்றை நாம் சிறப்பான முறையில் இறைவனின் திட்டத்திற்கு ஏதுவாற்போல் பணிசெய்ய வேண்டும்.

இறைத்திட்டத்திற்கு எதிராக அல்லது முரணாக செயற்படும் பொழுது இறைவன் தாம் கொடுத்த அருட்கொடைகள் மீள பெறுபவரல்ல, மாறாக அந்த அருட்கொடையோடு மீண்டும் தம்மிடம் திரும்பி வரவேண்டுமென்றுதான் இறைவன் விரும்புகின்றார். இறைவனின் திட்டமும் இறைபணி செய்ய வேண்டுமென்பதுதான் முக்கியமான திட்டமாகும். இதைப்பயன்படுத்தி இவ்வுலக இறையரசு பரவவும், இறையாட்சிப்பணி தொடரவும் இறைவனின் அருட்கொடைகளை பயன்படுத்த வேண்டும். அதை தகுந்த முறையில் பயன்னடுத்தும் போதுதான் இறைவன் எம்மை தம்முடைய அரும் அடையாளங்கள் வழியாக ஆசீர்வதிப்பார்.

நன்றி

அன்புடன்,
அருட்பணி யூட் நிக்ஸன்
Parish Priest
Our Lady of Deliverance Tamil Catholic Mission
Montreal (QC), Canada.